# தமிழ்நாடு அரசு

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

பிரிவு : TNPSC Group II தேர்வு

பாடம் : பொதுத்தமிழ் (இலக்கணம்)

பகுதி : **வேர்ச்சொல்லைக் கொடுத்து - வினைமுற்று, வினையெச்சம், வினையாலணையும் பெயர், தொழில்பெயர் - உருவாக்குதல்**

**காப்புரிமை**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் குரூப் - 2 முதல்நிலை மற்றும் முதன்மை தேர்வுகளுக்கான காணொலி காட்சி பதிவுகள், ஒலிப்பதிவு பாடக்குறிப்புகள், மாதிரி தேர்வு வினாத்தாள்கள் மற்றும் மென்பாடக்குறிப்புகள் ஆகியவை போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் மென்பொருள் வடிவில் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது.

எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

**ஆணையர்,**
**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை**

# வேர்ச்சொல்லைக் கொடுத்து - வினைமுற்று, வினையெச்சம், வினையாலணையும் பெயர், தொழில்பெயர் - உருவாக்குதல்

**வேர்ச்சொல்லைக் கொடுத்து - வினைமுற்று, வினையெச்சம், வினையாலணையும் பெயர், தொழில்பெயர் - உருவாக்குதல்**

**1. வினைமுற்று:**

- ஒரு சொற்றொடரில் செயல் முற்றுப் பெற்ற நிலையையும், காலத்தையும் காட்டுவது வினைமுற்று எனப்படும்.

  எ.கா: - வந்தான், பாடுகிறாள், பேசுவார்.

**2. பெயரெச்சம்:**

- சொற்றொடரில் சொற்கள் செயல் முற்று பெறாது எஞ்சி நிற்பது எச்சவினை எனப்படும். எச்சவினை பெயர்ச்சொல்லைத் தழுவி நின்று பொருள் முடிவைத் தருவது பெயரெச்சம் எனப்படும்.

  எ.கா.: வந்த மாணவன், பாடுகிற பெண், பேசும் கிளி
- மேற்கண்ட தொடர்களில் உள்ள "வந்த, பாடுகிற, பேசும்" என்னும் சொற்கள், மாணவன், பெண், கிளி என்னும் பெயர்ச் சொற்களைத் தழுவிநின்று பொருள் முடிவைத் தருகின்றன. இவை பெயரெச்சம் எனப்படும்.

**3. வினையெச்சம்:**

- எச்சவினை, மற்றொரு வினையைத் தழுவி நின்று பொருள் முடிவைத் தருவது வினையெச்சம் எனப்படும்.

  எ.கா.: வந்து பார், வர எழுகிறான், வந்தால் மகிழ்வான்.
- இத்தொடர்களில் உள்ள "வந்து, வர, வந்தால்" என்னும் சொற்கள் எச்சவினைகள், பார், எழுகிறான், மகிழ்வான் என்னும் வினைமுற்றுகளைத் தழுவி நின்று பெயர் முடிவை உணர்த்துகின்றன. எனவே இவை வினையெச்சம் எனப்படும்.

**தொழிற்பெயர் வகைகள் :**

தொழிற்பெயர் இரு வகைப்படும்

1. முதனிலைத் தொழிற்பெயர்
2. முதனிலைத் திரிந்த தொழிற்பெயர்

**முதனிலைத் தொழிற்பெயர் :**

- தொழிற்பெயர் விகுதிகளே இல்லாமல் பகுதி மட்டும் வந்து தொழிலை உணர்த்துவதற்கு முதனிலைத் தொழிற்பெயர் என்று பெயர்.

  எ.கா : கபிலனுக்கு அடி விழுந்தது, சுடு, கெடு.

- இதில் அடி என்பது விகுதி பெறாமல் பகுதியாய் நின்று தொழிலை உணர்த்துகிறது.

**முதனிலைத் திரிந்த தொழிற்பெயர் :**

- தொழிற்பெயரின் முதனிலையாகிய பகுதி திரிந்து வருவது முதனிலைத் திரிந்த தொழிற்பெயராகும். முதனிலைத் திரிந்த தொழிற்பெயரில் முதலெழுத்து நீண்டு ஒலிக்கும்.

  எ.கா : அறிவறிந்து மக்கட் பேறு

  அவனுக்கு என்ன கேடு

- இங்கு பெறு, கெடு, என்னும் முதனிலைகள் பேறு, கேடு எனத் திரிந்து பெறுதல், கெடுதல் என்ற பொருளை உணர்த்துகின்றன.

**வினையாலணையும் பெயர்**

- ஒரு வினைமுற்று வினையை உணர்த்தாமல் அவ்வினைக்குரிய கருத்தாவை உணர்த்தி எழுவாயாக நின்று வேற்றுமை உருபுகளை ஏற்றும் ஏற்காமலும் வருமாயின் அது வினையாலணையும் பெயர் எனப்படும்.
- வினையாலணையும் பெயர் மூன்று காலத்தையும் உணர்த்தும், பெயர்க்குரிய வேற்றுமை உருபுகளையும் பெற்று வரும்.

  எ.கா : முருகன் பரிசு பெற்றான்- நிகழ்காலம்

  பரிசு பெற்றானை பாராட்டினர் - இறந்தகாலம்

- இவ்விரு தொடர்களிலும் பெற்றான் என்ற வினைச்சொல் வந்துள்ளது, முதல் தொடரிலுள்ள பெற்றான் என்ற சொல் முருகன் எனும் எழுவாய்க்கு பயனிலையாக அமைந்துள்ளது. ஆனால் இரண்டாம் தொடரிலுள்ள பெற்றானை என்ற சொல் வினை செய்தவரைக் (முருகன்) குறிக்கிறது.

| **தொழிற்பெயர்** | **வினையாலணையும் பெயர்** |
|---|---|
| தொழிலுக்குப் பெயராய் வரும் | தொழில் செய்பவருக்குப் பெயராக வரும் |
| படர்க்கை இடத்தில் மட்டுமே வரும் | மூவிடங்களிலும் வரும் |
| பெரும்பாலும் காலங்காட்டாது | முக்காலத்தையும் காட்டும் |

| வேர்ச் சொல் | வினை முற்று | வினை யெச்சம் | பெயரெச்சம் | வினையாலணையும் பெயர் | தொழிற்பெயர் |
|---|---|---|---|---|---|
| அடி | அடித்தார் | அடித்து | அடித்த | அடித்தாரை | அடித்தல் |
| பார் | பார்த்தான் | பார்த்து | பார்த்த | பார்த்தவனை | பார்த்தல் |
| மலர் | மலர்ந்தது | மலர்ந்து | மலர்ந்த | மலர்ந்தானை | மலர்தல் |
| செய் | செய்தான் | செய்து | செய்த | செய்தவன் | செய்தல் |
| கத்து | கத்தினான் | கத்தி | கத்திய | கத்துவதை | கத்துதல் |
| எழு | எழுந்தார் | எழுந்து | எழுந்த | எழுந்தாரை | எழுதல் |
| தடு | தடுத்தான் | தடுத்து | தடுத்த | தடுத்தவனை | தடுத்தல் |
| வா | வந்தான் | வந்து | வந்த | வந்தானை | வருதல் |
| விடு | விடுவித்தான் | விடுத்து | விடுத்த | விடுத்தானை | விடுதல் |
| வேய் | வேய்ந்தான் | வேய்ந்து | வேய்ந்த | வேய்ந்தவரை | வேய்தல் |
| வை | வைத்தான் | வைத்து | வைத்த | வைத்தாரை | வைதல் |
| வரை | வரைந்தான் | வரைந்து | வரைந்த | வரைந்தவனை | வரைதல் |
| படி | படித்தாள் | படித்து | படித்த | படித்தவளை | படித்தல் |
| கூடி | கூடினார்கள் | கூடி | கூடிய | கூடினாரை | கூடுதல் |
| கல | கலந்தார் | கலந்து | கலந்த | கலந்தவனை | கலத்தல் |
| கொடு | கொடுத்தான் | கொடுத்து | கொடுத்த | கொடுத்தவன் | கொடுத்தல் |
| கல் | கற்றான் | கற்று | கற்ற | கற்றானை | கற்றல் |
| தொடு | தொட்டது | தொட்டு | தொட்ட | தொட்டவரை | தொடல் |
| வீழ் | வீழ்ந்தான் | வீழ்ந்து | வீழ்ந்த | வீழ்ந்தவனை | வீழ்ச்சி |
| காண் | கண்டான் | கண்டு | கண்ட | கண்டாரை | காணல் |
| உடை | உடைத்தார் | உடைத்து | உடைத்த | உடைத்தவரை | உடைத்தல் |
| ஓடு | ஓடியது | ஓடு | ஓடிய | ஓடினானை | ஓட்டம் |
| எழுது | எழுதினார் | எழுதி | எழுதிய | எழுதியவனை | எழுதுதல் |
| உழு | உழுதார் | உழுது | உழுத | உழுதவரை | உழுதல் |
| அஞ்சு | அஞ்சினான் | அஞ்சி | அஞ்சிய | அஞ்சியவனை | அஞ்சுதல் |
| பூண் | பூண்டார் | பூண்டு | பூண்ட | பூண்டாரை | பூணல் |
| நறுக்கு | நறுக்கியது | நறுக்கி | நறுக்கிய | நறுக்கியனானை | நறுக்கல் |
| பேசு | பேசினார் | பேசி | பேசிய | பேசினானை | பேசுதல் |
| வில் | விற்றான் | விற்று | விற்ற | விற்றானை | விற்றல் |
| நோக்கு | நோக்கினான் | நோக்கி | நோக்கிய | நோக்கினானை | நோக்கல் |
| ஓம்பு | ஓம்பினார் | ஓம்பி | ஓம்பிய | ஓம்பியவரை | ஓம்பல் |
| இயம்பு | இயம்பியது | இயம்பி | இயம்பிய | இயம்பியவரை | இயம்பல் |